பக்கங்கள் நான்கு விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 82 பிரமோதூத மாசி 05
1991 பெப்ருவரி 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

## வாராந்தம் 10லீற்றர் டீசல் கிடைத்தும் அம்புலன்ஸுக்கு பொதுமக்களே வழங்க வேண்டும்

யாழ் குடாநாட்டிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் உள்ள அம்புலன்ஸ் வாகனங்களுக்கு வாராந்தம் செஞ்சிலுவைச்சங்கம் பத்து லீற்றர் டீசலை வழங்கி வருகிறது. இதே நேரம் வெளிச்சந்தையில் மேலதிகமாக எரிபொருள் வாங்கவும் சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சாரதிகளுக்கும் மேலதிக கொடுப்பனவும் கிடைக்கிறது. ஆனால் இந்த ஆஸ்பத்திரிகளிலிருந்து அவசர நோயாளர்களை யாழ்ப்பாணம் கொண்டுவர உறவினர்களிடம் டீசல் தருமாறு ஆஸ்பத்திரி நிர்வாகங்கள் கேட்கின்றதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். (74)

## அம்பாறையில் வீரமரணம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பற்று விசேட அதிரடிப் படையினர் கடந்த திங்கள் 7-ம் குறிச்சிப் பகுதியைச் சுற்றி வளைத்த போது விடுதலைப் புலிகள் இயக்க முழுநேர உதவியாளர் ''கலா'' சயனைட் அருந்தி வீரமரணமடைந்தார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

## புலிகள் கட்டுப்படுத்தப்படுவர் என்கிறார் புதிய ஆளுநர்

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் முற்றாகக் கட்டுப்படுத்தப்படும் என்கிறார் புதிதாகப் பதவி ஏற்றுள்ள தமிழக ஆளுநர் பீஸ்மன் நாராயண் சிங். நேற்று நடைபெற்ற உயர் மட்ட மாநாடு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## கொழும்பு விடுதிகளில் தமிழருக்கு நோய்

கொழும்பிலுள்ள விடுதிகளில் தங்கியுள்ள தமிழ் இளைஞர்கள் பலருக்கு சுகாதார சீர்கேட்டால் தொற்று நோய்கள் பிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சின்னமுத்து, கொப்புளிப்பான், மலேரியா போன்ற நோய்கள் இவர்களில் பலருக்கு பிடித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (43)

## வடமராட்சி கிழக்கு கடலில் கடற்படை ரோந்து தீவிரம்

கடந்த சில தினங்களாக வடமராட்சி கிழக்கின் கடற் பிரதேசத்தில் கடற்படைப் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

கடல் கொந்தளிப்பு குறைந்துள்ளதனாலேயே இக்கடற்படைப் படகுகள் கரைப்பகுதியில் நடமாடித்திரிகின்றன.

இரவு நேரங்களிலேயே இக் கடற்படைப் படகுகள் அதிகமாக நடமாடித் திரிகின்றன (43)

## மன்னாருக்கு புதிய பிரிகேடியர்

மன்னார் மாவட்டத்தின் புதிய இராணுவ பிரிகேடியராக லால் வீரசூரியா நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் பணி புரிந்த இவர் தற்போது மன்னாருக்கு மாற்றப்பட்டுள்ளார். (33)

## விமானக் குண்டு வீச்சுக்கு நவசமசமாஜக்கட்சி கண்டனம்

வடபகுதியில் இடம் பெறும் கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுக் குறித்து நவசமசமாஜக்கட்சி கண்டித்து பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்துள்ளது.

சிறு குழந்தைகள் உட்பட பலர் இத்தாக்குதலால் கொல்லப்பட்டுள்ளனர். அத்துடன் நூற்றுக்கணக்கான வீடுகள், கடைகள், ஆல

— 4 ஆம் பக்கம் பார்க்க

### ★ வடக்கிலும் தெற்கிலும் வாழும்

# அன்னையர் ஒன்றுபட்டு குரல் கொடுக்க ஆயத்தம்

## மகனை இழந்த தமிழ்ப் பெண்மணி தலைமை தாங்குகிறார்

தெற்கில் உள்ள அன்னையர் முன்னணி வடக்கு கிழக்கில் இயங்கும் அன்னையர் முன்னணியுடன் இணைந்து செயற்படவுள்ளதாக கொழும்பில இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் ஏற்பட்ட நிலைமையால் ஐம்பதாயிரம்பேர்வரை காணாமல் போயுள்ளதற்கு ஆதாரங்கள் உண்டு. வடக்கு, கிழக்கில் அதனைவிட மோசமான நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.

இதனாலே தென்னிலங்கை அன்னையர் முன்னணி வடகிழக்கு அன்னையர் முன்னணியுடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ளது.

ரிச்சாட் டீ சொய்சாவின் தாயார் திருமதி டாக்டர் சரவணமுத்து மற்றும் தென்பகுதி அன்னையர் முன்னணி தலைவிகள், சில எதிர்க்கட்சி எம். பிக்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இம்முன்னணியின் அமைப்பாளர்களில் ஒருவரான டாக்டர் திருமதி சரவணமுத்து

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக கரையோரப் பாதுகாப்பு கூர்க்காப்படையினரிடம்

தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளில் கூர்க்காப் படையினர் கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் இந்தியப் படை இலங்கையில இருந்த போது கூர்க்காப்படையினரிடம் அனுபவப்பட்ட பல தமிழ்மக்கள் தற்போது தமிழ் நாட்டில் அகதிகளாகத் தங்கியுள்ளனர். இவர்கள் தற்போது இந்தக் கூர்க்காப் படையினரால் விசாரிக்கப்பட்டு வருவதாக தமிழகத்தில் இருந்து வந்த ஒருவர் தெரிவித்தார். (43)

## வடக்கில் விமானத் தாக்குதலுக்கு இந்தியா கவலை தெரிவிக்கிறது

இலங்கையின் வடபகுதியில் அதிகரித்துவரும் ஸ்ரீ லங்கா விமானப்படையின் தாக்குதல்கள் குறித்து இந்தியா நேற்று கவலை வெளியிட்டுள்ளது.

இவரின் தாக்குதல்களினால் பொதுமக்கள் பலர் பலியாவதும், அவர்களினதும் சொத்துகள் நாசமடைந்து வருவதும் இந்தியாவுக்கு கவலை தருவதாக உள்ளது என டில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மன்னர் படையெடுத்தபோதும் தமிழ் மக்கள் காட்டிக்கொடுக்கவில்லை

''இந்தியத் தமிழ் மன்னர்கள் முன்னர் எமது நாட்டின் மீது படையெடுத்த போதெல்லாம் இம் மண்ணில் பிறந்த தமிழ் மக்கள் அந்த மன்னர்களுக்கு உதவி செய்ததாகவோ, காட்டிக்கொடுத்ததாகவோ சரித்திரத்தில் கிடையாது.''

இவ்வாறு வண. ராஜகிரிய பண்டித்த கொடதெ தெனிய தேரோ கம்பளையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கூறினார்.

இன்றும் அதேபோல தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றவர். அதனால் அவர்களின் உரிமையையும், சுதந்திரத்தையும் பாதுகாப்பதன் மூலமே எமது உரிமைகளைப் பேணலாம் என்றும் அவர் சொன்னார். (33)

## தலைமன்னர், பேசாலைப் பகுதியில் கைதானோர் நிலைமை தெரியவில்லை

பேசாலை அகதி முகாமிலும், தலைமன்னார் மேற்கு கிராமத்திலும் அப்பாவி மக்கள் கைது செய்யப்படுவதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இவர்களைப் பற்றிய விவரம் எதுவும் தெரியவில்லை எனவும் இதனால் மக்கள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# 5 ஆவது கட்ட உலர் உணவு விநியோகத்தையும் இலவசமாக வழங்க முயற்சி!

## சாத்தியப்படாவிடில் கடனாகக் கிடைக்கும்!!

யாழ் மாவட்டத்தில் இலவச உலர் உணவு நிவாரணத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுவருவதாக அறியப்படுகின்றது.

ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவொன்றின்படி மாதாந்தரம் 1500 ரூபாவுக்குக்குறைந்த வருமானத்தைப்பெறும் அரச ஊழியர்களுக்கு 4 வது கட்டம் வரையிலான உலர் உணவு விநியோகத்தை மட்டுமே இலவசமாக வழங்குவதென முடிவெடுக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் அடுத்தவாரம் வழங்கப்படவுள்ள 5 வது உலர் உணவு விநியோகத்திற்கு 1500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறும் அரச ஊழியர்களும், ஓய்வூதியக் காரர்களும் பணம் செலுத்துதல் வேண்டும்

யாழ் மாவட்டத்தில் சீரற்ற நிலை தொடர்வதினால் இந்த 5 வது கட்ட உலர் உணவு விநியோகத்தையும் இலவசமாக வழங்குவதற்கான முயற்சிகள் செயலக மட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளன.

இது சாத்தியப்படாதவிடத்து 5 வது கட்ட உலர் உணவுப் பொருள்களை 1500 ரூபாவுக்கு மேல் ஓய்வூதியம் பெறுபவர்களுக்குக் கடனடிப்படையில் வழங்கிவிட்டுப் பின்னர் அவர்களுக்குரிய மாதாந்தர ஓய்வூதியம் சீராக வழங்க ஆரம்பிக்கும் போது அக்கடனை ஓய்வூதியத்தில் அறவிடக் கூடிய வகையிலான திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படுமெனவும் செயலக பகுதிகள் தெரிவித்தன. (16)

---

## குவைத்திலிருந்து திரும்பிய 72,600 பேரில் 21 ஆயிரம்பேரே நஷ்டஈட்டுக்கு விண்ணப்பம்

குவைத்திலிருந்துகொழும்பு திரும்பியுள்ள இலங்கையர்களில் 21,000 பேர் மட்டுமே தொழில் இழந்தமைக்கான நஷ்டஈடு கோரி விண்ணப்பித்துள்ளனர்.

குவைத்திலிருந்து 72,600 இலங்கையர்கள நாடு திரும்பியுள்ள போதிலும் மிகக்குறைவானோரே நஷ்டஈட்டுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

சர்வதேச தொழில் ஸ்தாபனம் இலங்கை அரசுக்கூடாக இந்த நிவாரணத்தை வழங்கவுள்ளது.

---

யாழ் பல்கலைக்கழகம் இலங்கை

## பதவிவெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991.03.07 வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும். தாவரவியல்/ இரசாயனவியல்/ விலங்கியல்/ பௌதிகவியல்/ கணிதமும் புள்ளிவிவரவியலும் - உதவி விரிவுரையாளர்/ சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11/ சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1

சம்பள அளவுத்திட்டம்;

1. சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1- ரூபா: 9,600 - 8X 250-11, 600 /- மாதமொன்றுக்கு
2. சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11- ரூபா: 8, 000- 5X 250 - 9, 250/- மாதமொன்றுக்கு
3. உதவி விரிவுரையாளர் :- ரூபா 3, 900/- (நிலையானது) மாதமொன்றுக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை தபாலில் பெறவிரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 1-50 முத்திரை வொட்டப்பட்ட 23 X 10 ச.மீ அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

1991. 02. 11.

02094

---

## 3500 ரூபாவாக அதிகரிக்க கோரிக்கை

அரச ஊழியர்களும், ஓய்வூதியக்காரர்களும் இலவச நிவாரணத்தைப பெறுவதற்குரிய வருமான மட்டத்தை 3500 ரூபாவாக அதிகரிக்குமாறு நல்லூர்த் தொகுதி ஓய்வூதியர் நலன் புரிச் சங்கம் ஜனாதிபதியைக்கேட்டுள்ளது.

தற்போது 1499 ரூபாவே நிவாரணம் பெறுவதற்குரிய மாதவருமான மட்டமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த உச்ச வரம்பு பல வருடங்களுக்கு முன்னர் உள்நாட்டுப் பிரச்சினைகளும், வளைகுடாப் போர் நடவடிக்கைகளும் ஏற்படுவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டதாகும்.

இதனால் இலவச நிவாரணத்திற்கான மாதவருமான உச்சவரம்பை தற்போதைய வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு ஏற்ப 3500 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமெனவும் மேற்படி சங்கம் யாழ் அரச அதிபர் மூலம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கேட்டுள்ளது. (16)

## திரிசாரணர் கூட்டம்

யாழ் மாவட்டத் திரிசாரணர்களுக்கான கூட்டம்இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

---

## சிறு விளம்பரம்

### தேவை

யாழ் நகரில் வசிக்கும் இந்து சமயத்தைச்சேர்ந்த 28 வயதான ஆசிரியைக்கு மணமகன் தேவை. அரச, கூட்டுத்தாபனத்தில்பணி புரிபவர்கள் விண்ணப்பிக்கவும், விளம்பரஇல 296 மே. பா. முரசொலி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 02081

### தவறிவிட்டது

அண்மையில்வல்வெட்டித்துறையில் நடந்த குண்டு வீச்சின் போது வல்வெட்டித்துறையிலிருந்து இடம் பெயர்ந்து ஊன்னாலைக்கு இடம் பெயர்ந்த போது எனது பையொன்றுதவறிவிட்டது. அதனுள் றஞ்சிதா, றமணி, விநாயகமூர்த்தியாகிய எனது பாஸ்போட், அடையாள அட்டை, இரண்டு மண்மீட்பு நிதிப்பற்றுச் சீட்டு, எனது பிள்ளைகளின் குறிப்புகள் ஆகியனவும் அடங்கும். இவற்றைக் கண்டெடுத்து தருபவர்கட்குத் தகுந்த சன்மானம்வழங்கப்படும். ஒப்படைக்கும் முகவரி:- முரசொலிக் காரியாலையம் அல்லது கணபதி படிப்பகம், வல்வெட்டித்துறை. றஞ்சிகா றமணி விநாயகமூர்த்தி சுரேந்திரன் வீதி, (A. G A Lane)வல்வெட்டித்துறை. 02091

### பரீட்சை நூல்

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானி/தொழில் நுட்ப வியலாளர் பரீட்சைக்குரிய பொது உளச் சார்பு (IQ) நூல் எல்லாப்பிரபல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. விலை: 50/-. ஆக்கியோன் க. குணராசா, எம். ஏ. 02085

---

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## Services of Translators

Services of other officers or persons outside the public Service who are competent to do official translations in the following, are required by the University of Jaffna:

English to Tamil
English to Sinhala
Sinhala to Tamil

Payment will be made on a piece rate basis. Rates applicable for translations are as follows:

Non technical translations-Rs. 15/- per 360 words.

Technical translations-Rs. 30/- per 360 words.

Where the number of words in a translation is less than 360, payment may be made on a prorata basis.

Those interested are requested to contact the Registrar, University, of Jaffna, Thirunelvely. The closing date for the above is 1991 . 03 . 15.

REGISTRAR

University of Jaffna,
Thiruneively,
Jaffna
1991 . 02 . 15.

02095

## யாழ்தேவி வவுனியா வரை!

யாழ் தேவி ரயில்சேவை கடந்த வெள்ளிக்கிழமை முதல் வவுனியா வரை நடாத்தப்படுவதாகப் புகையிரதப் பகுதி அறிவித்துள்ளது

கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து யாழ் தேவி ரயில்சேவை அனுராதபுரம் வரை மட்டுமே நடாத்தப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கலாசாலையில் வரவேற்பு

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 2ஆம் வருட மாணவர்களால் 1ஆம் வருட மாணவர்கள் வரவேற்கப்பட்டனர்.

பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையிலான இந்நிகழ்ச்சி கலாசாலையின் யோக மண்டபத்தில் நிகழ்ந்தபோது, கூட்டுப் பிரார்த்தனை, விசேடபூஜை ஆகியனவும் இடம்பெற்றன.

## கணித ஆசிரியர் பற்றாக்குறை

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்விப் பிரிவில் கணிதபாட ஆசிரியர்களுக்கும் பயிற்றப்பட்ட ஆரம்பப்பிரிவு தமிழ் ஆசிரியர்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதாக அறியக் கிடைக்கின்றது.

இங்குள்ள பல பாடசாலைகளில் 1 ஆம் ஆண்டு முதல் 5 ஆம் ஆண்டு வரையுள்ள வகுப்புக்களில் கல்வி கற்பிப்பதற்கான பயிற்றப் பட்ட தமிழ் ஆசிரியர்களும் ஆரம்ப ஆசிரியர்களும் இல்லாது மாணவர்கள் பெரும் கஷ்டப்பட்டு வருகின்றனர். (12)

## மீண்டும் சேவையில்!

சுயவிருப்பின் பேரில் ஓய்வுபெற விண்ணப்பித்த யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்களில் சிலரை மீண்டும் சேவையில் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ள போதனா வைத்தியசாலைகள் அமைச்சு அனுமதிவழங்கியுள்ளது.

தொழில்நுட்ப மற்றும் பயிற்சி பெற்ற ஊழியர்கள் உட்பட ஓய்வு பெற்றோர் தேவையைப் பொறுத்து மீண்டும் சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

ஆறுமாத ஒப்பந்தத்தில் இவர்கள் முதலில் சேர்க்கப்படுவர். (74)

## கடற்படையால் மலர்தொழிலிழப்பு

தீவுக் கடல் பகுதியில் காரைநகர் கடற்படையினரின் கெடுபிடிகள் என்றுமில்லாதவாறு தொடர்ந்து கொண்டு வருவதனால் அனலைதீவு, எழுவைதீவுப் பகுதி மீனவர் மீன்பிடிக்க முடியாத நிலையில் தொழிலை இழந்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் இதனால் பட்டினிச்சாவை எதிர் நோக்கியுள்ளன.

படையினர் நாளாந்தரம் அப்பகுதிக் கடலில் நடமாடிவருவதினால் சிறுதொழிலாளிகள் கூட தொழில் செய்யமுடியாத நிலையில் உள்ளனர். (20)

## சிறுவர்பரிபாலனமும் இனி இல்லை

கடந்த பல வருடங்களாக யாழ் மாவட்டத்தில் இயங்கி வந்த நல்லொழுக்க, விசாரணைச் சிறுவர் பரிபாலன சேவைகள் திணைக்களம் இம்மாதம் 28 ஆம் திகதியுடன் மூடப்படவிருக்கின்றது.

இதற்கான உத்தரவு வடக்கு-கிழக்கு மாகாண அரசின் சமூக சேவைப் பகுதியின் செயலாளரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இத் திணைக்களத்தில் கடமையாற்றும் எல்லா உத்தியோகத்தர்களையும் 01-03-91ல் திருகோணமலையிலுள்ள சமூக சேவைப் பகுதியில் கடமையேற்கப் பணிக்கும் படியும், இத் திணைக்களத்திற்குரிய தளபாடங்களை வாகனங்களில் ஏற்றித் திருகோணமலைக்கு அனுப்பி வைக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது. (47)

# மட்டு. பல்கலை. ஊழியர்களுக்கு திடீர் இடமாற்றம்!

# மாணவர்களையும் தெற்கிற்கு மாற்ற 'ஊக்குவிப்பு'!!

தென்தமிழீழ மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் கடமை புரியும் சில ஊழியர்கள் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவினால் திடீரென தென்பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தொழில் நுட்பத் தரத்தையுடைய ஊழியர்கள் சிலரும் இந்த இடமாற்றப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனராம்.

இதேபோன்று சில மாணவர்களும் தென் பகுதி பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் பெறுமாறு 'ஊக்குவிப்பு' வழங்கப்படுவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டு. பல்கலைக்கழகத்தை மீள ஆரம்பிப்பதற்கு அப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முயற்சி எடுத்து வரும் இவ்வேளையில் மேற்கொள்ளப்படும் இத் திடீர் 'இடமாற்றங்களும்" ,'ஊக்குவிப்புக்களும்' தமிழ் மாணவர்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (70)

# யாழ் பல்கலைக்கழகத்தையும் மூடிவிட

# கொழும்பில் அதிகாரிகள் 'ஆலோசனை'!

தற்போதுள்ள யுத்த சூழலின் மத்தியிலும் யாழ் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்கி வருவது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வட்டாரங்களுக்கும், உயர் கல்வி அமைச்சு வட்டாரங்களுக்கும் பெரும் 'ஆச்சரியத்தையும்', 'வயிற்றெரிச்சலையும்' ஏற்படுத்தியுள்ளதாம்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற 'பல்கலைக்கழகங்களின் அடிப்படைத் தேவைகள்' பற்றிய கூட்டத்தில் இதனை யாழ் பல்கலைக் கழக அதிகாரிகளினால் நேரடியாகவே உணர முடிந்ததாம்.

ஜே. வி. பியின் கலவர காலங்களில் தென்பகுதிப் பல்கலைகழகங்கள் தொடர்ந்து மூன்று வருடங்கள் மூடப்பட்டு, அப்பகுதி மாணவர்களின் கல்விநிலை பாதிக்கப்பட்டிருந்த அதேவேளை அரசின் யுத்த நடவடிக்கைகளுக்கும் மத்தியில் மூடப்படாமல், தமிழ்ப் பட்டதாரி மாணவர்களின் கல்வி நிலை அதிகம் பாதிக்கப்படாமல் யாழ் பல்கலைக்கழகம் தொடர்ந்தும் இயங்கி வருவதே தென்பகுதி அதிகாரிகளின் இந்த வயிற்றெரிச்சலுக்குக் காரணமாம்.

தற்போதைய யுத்த சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு யாழ் பல்கலைக்கழகத்தை மூடிவிடுமாறுகூட இந்தக் கூட்டத்தில் வைத்து உயரதிகாரிகளினால் பகிரங்கமாகவே 'ஆலோசனை'கூறப்பட்டதாம்.

யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து இடம்பெயர்ந்துள்ள சில மாணவர்களின் விடயம் குறித்து இக்கூட்டத்தில் அக்கறை காட்டிய இந்த அதிகாரிகள் தற்போது இங்கு கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் பல மாணவர்களின் நலனில் அக்கறையின்றி உள்ளனர்.

# நான்கு வடபகுதி விவசாயிகளுக்கு விவசாயக்காப்புறுதி மரணப் பணிக்கொடை

விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டத்தின் கீழ் தம்மை இணைத்துக் கொண்ட நான்கு விவசாயிகளுக்கான மரணப்பணிக்கொடை எதிர்வரும் புதன்கிழமை நல்லூர் கமத்தொழில் காப்புறுதிச் சபையின் மாவட்ட அலுவலகத்தில் வைத்து மரணமடைந்த விவசாயிகளின் உரித்தாளிகளிடம் வழங்கப்படவுள்ளது.

இதன்படி மாதகலைச் சேர்ந்த எம். விஜயரட்ணம் என்ற விவசாயிக்கு ரூபா 25, 122. 25 உம், கட்டுடையைச்சேர்ந்த எஸ் தம்பிமுத்து என்ற விவசாயிக்கு ரூபா 7236. 68 உம், கரணவாய்மேற்கைச்சேர்ந்த ரி. பத்மநாதன் என்ற விவசாயிக்கு 7079. 08உம்,கலைபுரத்தைச் சேர்ந்த என். பி பரராஜசேகரன் என்ற விவசாயிக்கு ரூபா 10,686 53 உம் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே பல விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் நன்மை பெற்றுள்ளார்கள். இரண்டாயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள் இத்திட்டத்தில்இணைந்துள்ளார்கள்.

இவ்வாறு பணிக்கொடை வழங்கப்படும் போது விவசாயி ஒருவர் செலுத்திய கட்டுப்பணமும் திருப்பி வழங்கப்படும் மேலும் ஆறு மாதத்திற்கு ஒரு தடவையாக வருடத்தில் இரண்டு தடவைகள் குறிக்கப்பட்ட கட்டுப் பணத்தை ஒரு விவசாயி செலுத்தினால் போதும் எனவும் அவ்வாறு செலுத்தும் ஒரு விவசாயி தமது அறுபதாவது வயதிலிருந்து ஒரு குறிக்கப்பட்ட தொகையை ஓய்வூதியமாகப் பெறமுடியும் எனவும் கமத்தொழில் காப்புறுதிச் சபையின் யாழ்- கிளிநொச்சிப் பிராந்திய உதவிக் கணிப்பாளர் எஸ் சிவஜநா தெரிவித்தார். (43)

# வலி - வடக்குப் பகுதியைச் சேர்ந்த 15000 மாணவர்கள் இடம்பெயர்வு

அண்மைய வன் செயல்கள் காரணமாக வலி, வடக்கு பிரதேசத்திலுள்ள பல பாடசாலைகளிலும் கல்வி கற்ற சுமார் 15000 மாணவர்கள் இடம்பெயர்ந்து தாம் தங்கியுள்ள இடத்துப் பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றார்கள்.

இப் பகுதிப் பாடசாலைகள் தற்காலிகமாக வேறு பாடசாலைகளில் இயங்கி வந்தாலும், மாணவர் வரவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

இதேசமயம் இப் பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்கள் தாம் தங்கியுள்ள பகுதிகளில் இருந்து நீண்டதூர பயணம் செய்தே இப் பாடசாலைகளுக்கு வருகின்றார்கள். எனினும் ஆசிரிய தொகைக்கு ஏற்ப மாணவர்கள் இல்லாமல் இருக்கின்றது. ஆனால் வேறு பல பாடசாலைகளில் மாணவர் தொகை அதிகமாக இருக்கிறது. ப-10


## தேவை

சங்கானை வடிசாலை சமாசத்திற்கு ஜெனறேற்றர் 5 K. V ஒன்று கொள்வனவு செய்யப்பட உள்ளது. விற்பனைசெய்யவிரும்புவோர் பொது முகாமையாளருடன் உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்
சங்கானை வடிசாலை சமாசம்
சங்கானை 02093

# வளைகுடாவில் சமாதானமுயற்சி ஈரான், ரஷ்யா தீவிரம்

குவைத்தைவிட்டு வெளியேற நிபந்தனைகளுடன் கூடிய ஈராக்கின் புதிய அறிவிப்பைத் தொடர்ந்து வளைகுடாவில் அமைதியை மீண்டும் கொண்டுவரும் முயற்சியில் ஈரானும், ரஷ்யாவும் களத்தில் குதித்துள்ளன.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனுடன் பேச்சுகளை நடாத்தவென ஈரானின் உயர் மட்டக் குழுவொன்று பக்தாத் செல்லவுள்ளது. ஜனாதிபதி ரப்ஸஞ்செனியின் செய்தி ஒன்றையும் இவர்கள் சதாமிடம் எடுத்துச் செல்கின்றனர்.

இதேசமயம் ஈரானின் வெளியுறவு அமைச்சர் வலியாத்தி மொஸ்கோ சென்று ஜனாதிபதி கொர்ப்பச்சேவுடன் வளைகுடா குறித்து பேச்சு நடாத்தி வருகிறார். ஈராக்கின் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸிஸ் இன்று ரஷ்யா செல்கிறார்.

## தொடர்ந்து வான் தாக்குதல்

நேற்றுத் தொடர்ந்து ஈராக் மீது அமெரிக்க நேச நாட்டுப் படைகள் வான் தாக்குதல் நடாத்தின. ஈராக் தென் எல்லைப்பகுதியில் ஹெலிக்கப்டர்களும் தாக்குதல் நடாத்தின. இதே சமயம் ஈராக் சவுதி நோக்கி ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல் நடாத்தியுள்ளன. இதில் ஏற்பட்ட சேத விவரம் தெரியவில்லை.

ஈராக்கின் புதிய அறிவிப்பு குறித்து பிரிட்டனின் வளைகுடா விமானப்படைத் தளபதி கருத்து வெளியிடுகையில் இது பழைய உணவுக்குப் புதிய சமையல் முறைபோல் இருக்கிறது என்றார்.

## தாக்குதலை நிறுத்துமாறு கொர்ப்பச்சேவ்

ஈராக்குடன் தரைத் தாக்குதலை ஆரம்பிக்கும் முன்னோடி நடவடிக்கையான விமானத் தாக்குதல்கள் தொடர்வதாக அமெரிக்க நேச நாட்டுப்படைகள் நேற்று அறிவித்தன. அமெரிக்கா, பிரெஞ், பிரிட்டிஷ் விமானங்கள் தாக்குதலில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை தரைத் தாக்குதலை ஆரம்பிக்கும் திட்டத்தை ஒத்திவைக்குமாறும், ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் அஸீஸ் உடனான பேச்சுகள் முடிவடையும் வரை இது அவசியமானது எனவும் ரஷ்ய ஜனாதிபதி கொர்ப்பச்சேவ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


நாயன்மார்கட்டு
முறிநெரிவு வைத்தியசாலை

## அறிவித்தல்

பின்வரும் மூலி மரங்கள் (கொடிகள் கன்றுகள்) அவசியம் தேவைப்படுகின்றன. தரவிரும்பும் வைத்தியர்களோ, அல்லது பொது நிறுவனங்களோ, பொது மக்களோ தரும் சிந்தனையுடன் 25-02-91 முன்பாக தந்துதவுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

புன்னை, நாவல், அத்தி, இத்தி, பாலை, கடுக்காய், நெல்லி (பெரியது), தான்றி, வெளவ்லொட்டி, வில்வம், ஒதி, செம்பருத்தி, பெருமருந்து, கொடியரசு, பஞ்சபாண்டவர் முல்லை, நறுவிலி, வெள்ளருக்கு, காட்டுமா, கொன்றை, சரக்கொன்றை.

இவ்வண்ணம்
வைத்தியசாலை உரிமையாளர்
டாக்டர் ஏ. உமாகாந்தன்

02099


# வவுனியாவிலிருந்து பயணிகள் நேற்று வந்தனர் இங்கிருந்து செல்ல படையினர் அனுமதி மறுப்பு

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு வவுனியாவரை ரயிலில் வந்த பயணிகள் கடந்த சில நாட்களாக வவுனியாவில் தங்கிய பின்னர் நேற்று பலத்த சிரமத்தின் மத்தியில் இங்கு வந்தனர்.

வவுனியாவில் இருந்து தாண்டிக்குளம் வரை வாகனத்தில் வர அனுமதிக்கப்படுவதாகவும், இவர்களுடன் படையினரும் சேர்ந்து வர முயல்வதாகவும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

தாண்டிக்குளத்தில் இருந்து நொச்சிமோட்டை வரை நடந்தே வரவேண்டும்.

வவுனியாவுக்கு வந்த பலர் சண்டைகாரணமாக மீண்டும் கொழும்பு திரும்பியுள்ளனர்.

கொழும்பிலிருந்து தற்போது குறைந்தளவு பயணிகளே ரயிலில் பயணம் செய்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இங்கிருந்து எவரையும் தாண்டிக்குளத்திற்கு அப்பால் செல்ல படையினர் அனுமதிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

# 1980 க்கு முன்பிருந்தே வடக்கில் அபிவிருத்தியில்லை என்கிறார் நவம்

"வடக்கு கிழக்குப் பகுதிகளில் விரைவாக அமைதியை ஏற்படுத்த நீங்கள் வழிவகுக்காது போனால் வடக்குக் கிழக்கு மட்டுமன்றி நாடு முழுவதுமே முன்னேற முடியாது. எனவே யுத்த நிலைமைகளை மேலும் நீடிக்காது சமாதானத்துக்கு ஏதும் வழிவகைகள் இருந்தால் அதனைப் பற்றிச் சிந்தியுங்கள்!"

இவ்வாறு யாழ் மாவட்ட எம். பி. கே. நவரத்தினம் பாராளுமன்றத்தில் கூறினார்.

வன்முறை முடிந்த பின்னர் அபிவிருத்தி செய்வோம் என்கிறீர்கள். ஆனால், 1980-ம் ஆண்டுக்கு முன்பிருந்தே உங்கள் அரசாங்கம் பதவியில் இருந்து வருகிறது. அப்போதிருந்து வடக்கில் அபிவிருத்தி செய்ய என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (33)

# நாலாயிரம் ரூபா நிவாரணம் பருத்தித்துறையில் மீண்டும் கொடுப்பனவு

சுய உற்பத்திக்கடன் நிவாரணம் நாலாயிரம் ரூபா பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் மீண்டும் வழங்கப்படவுள்ளது.

இதன்படி இம்மாதம் 23-ம் திகதி சனிக்கிழமை அல்வாய் வடக்கில் 282 குடும்பங்களுக்கும், அல்வாய் மேற்கில் நூற்றிரண்டு குடும்பங்களுக்கும், கெருடாவில் வடக்கில் மூன்று குடும்பங்களுக்கும் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

ஏனைய பகுதிகளுக்கு அடுத்த மாதம் 9-ம் திகதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (05)

# கொழும்பில் மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பில் வெடி குண்டுகள் தொடர்பான எச்சரிக்கை நேற்றுப் பாதுகாப்பு அமைச்சினால் விடுக்கப்பட்டது.

ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், அலுவலகங்கள் போன்ற பொது இடங்களில் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும், சந்தேகத்திற்கிடமான பொருள்களைக் கண்டால் பாதுகாப்புப் படைகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் தலைநகர் மக்கள் கோரப்பட்டுள்ளனர்.

## வடக்கில்...

காணப்படவேண்டும் எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தலைமன்னார்...

அச்சத்துடன் வாழ்வதுடன் இந்தியாவுக்கு செல்ல முயல்வதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (33)

## விமானக் குண்டு...

யங்கள், பாடசாலைகள் என்பன அழிக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைகளுக்கான தனது தீர்வை முன்வைப்பதைவிட்டு அவர்களை இவ்விதம் அழித்தொழிக்கும் கைங்கரியத்தை அரசு ஏன் முழு மூச்சாக ஈடுபட்டுள்ளது இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## அன்னையர்...

அங்கு பேசுகையில் "சிலவாரங்களுக்கு முன் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றபோது பல மாதர் அமைப்புக்களின் தலைவிகளைச் சந்தித்தேன். அவர்கள் சகல வழிகளிலும் எமக்கு உதவ முன்வந்துள்ளனர்" என்றார்.

தொடர்ந்து பேசிய திருமதி சரவணமுத்து, "எனக்கு ரிச்சட்டைத் தவிர வேறு பிள்ளைகள் இல்லை. ஆனால் எனக்கு நேர்ந்தது போன்ற அவலம் இனியும் எமது தாய்மாருக்கு ஏற்பட நாம் அனுமதிக்க முடியாது.

இந்நாட்டில் ஆயிரக்கணக்கான பெண்கள் தமது கணவன்மாரை அல்லது பிள்ளைகளை இழந்து செய்வதறியாது திகைக்கின்றனர்" என்றும் குறிப்பிட்டார். (33)


## காலமானார்

### திருமதி மாரிமுத்து வள்ளியம்மை

அராலி மேற்கைச் சேர்ந்த திருமதி மாரிமுத்து வள்ளியம்மை அவர்கள் நேற்று (16-2-91) காலமாகிவிட்டார். இவர் திரு. சி. மாரிமுத்து (தேங்காய் வியாபாரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு தில்லைநாயகம் (கூட்டுறவு பரிசோதகரும், ரோறா ஸ்தாபகரும்), திரு. சின்னப்பு (பிரதிப் பணிப்பாளர், நீர்ப்பாசன திணைக்களம், திருகோணமலை), திருமதி க. நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி தி. மனோன்மணி, திருமதி சி. கலாவதி, திரு. பொ. கந்தையா (குணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மாலினி, சந்திரா, கோகிலரமணன், அருணன், சத்தியசீலன், நிர்மலா, கம்சலா ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிறு இன்று (17-2-91) 11 மணியளவில் நடைபெற்று வேலன்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. மாரிமுத்து

அராலி மேற்கு.

02098


இப்பத்திரிகை முரசொலி பப்பிளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மிபில்டிங்' உள்ள அச்சகத்தில் 17-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.